உத்தரவைப் பெற்று பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கராபுரம் தொகுதி, சின்னசேலத்தில் பேருந்துப் பணிமனை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம்மூலம் அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இப்பணிமனையினை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி, சின்னசேலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று புதிய போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

88—

தொகுப்பு வீடுகள்

***1203—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு மத்திய–மாநில அரசு திட்டம் மற்றும் மாநில அரசு திட்டத்தின்கீழ் இலவச வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ரூபாய் 22.12 கோடி செலவில், 2,949 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய 29 ஊராட்சிகளில் ஆலங்காடு, உப்பூர், ஜாம்புவானோடை, தில்லைவிளாகம், தொண்டியக்காடு, கற்பகநாதபுரம், விளாங்காடு, கோயிலூர், தம்பிக்கோட்டை கிழக்கு ஆகிய ஊராட்சிகள் மிகப் பெரிய அளவில் மீனவர்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். ஆகவே, அந்தப் பகுதிகளில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்படக்கூடிய புயல், வெள்ளக் காலங்களில் அந்த மீனவர்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த வகையில் அங்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.